School buildings

* 533 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are any rules now in force regarding the use of Government school buildings for public purposes; to state—

(b) if so, whether a copy of the same will be placed on the table of the House?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். கல்வி நிலையக் கட்டடங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஆகிய வற்றை பொதுக் காரிங்களுக்குப் பயன்படுத்தலை சென்னை கல்வி விதி 81-ல் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, முக்கியமான மாநாடுகள் நடத்துவதற்கு கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லாக் கட்சிகளுக்கும் குறிப்பிட்ட சமயத்திற்குக் கொடுக்கக்கூடிய முறையில் சர்க்கார் உத்தரவை ரிலாக்ஸ் செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. அரசியல் கட்சிக் கூட்டங்கள் தவிர மற்ற பொதுக் காரிங்களுக்கு இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிற வகையில் கொடுக்கலாம். அரசியல் கட்சிக் கூட்டங்களுக்குத் தருவதன் மூலம் பல மாச்சரியங்கள் ஏற்படுவதற்கும் பல நிலைமைகள் ஏற்படுவதற்கும் வழி ஏற்பட்டு விடக்கூடும். அதனால் பள்ளிக்கூடத்தின் சூழ்நிலை கெடும் என்ற காரணத்தால் அரசியல் கட்சிகளுக்கு அனுமதி அளிப்பதற்கில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: சில இடங்களில் அரசியல் கட்சிகளுடைய நாடகங்கள் அல்லது கூட்டங்கள் நடத்துவதற்காக இடமே இல்லாமலிருக்கிறது. அப்படிப்பட்ட நகரங்களில் முன் உத்தரவு பெற்று அந்தந்தக் கட்சிகள் தங்களுடைய கட்சியின் சார்பில் நாடகங்கள், கூட்டங்கள் முதலியவற்றை நடத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

@ 212-ம் பக்கத்தில் இணைப்பு -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதலிலேயே குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட இடங்கள் பொதுவாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை. பொதுக் கூட்டங்கள் என்னும்போது பல இடங்களில் அரசியல் கட்சி மாச்சரியங்கள் ஏற்படுகின்றன. கலகம் போன்றவைகளும் விளைந்துவிடுகின்றன. ஏற்கெனவே ஓரளவுக்குப் பள்ளிகளில் கட்டுப்பாடற்ற நிலைமை இருக்கும்போது, அதற்கு இந்த வகையில் இடம் கொடுத்தால் பெஞ்சுகள், நாற்காலிகள் சில சமயங்களில் இருக்குமா என்ற சந்தேகம் ஏற்படும். கட்டடங்கள் கட்ட அரும்பாடு படும்போது, அந்தக் கட்டடங்கள் பாழ்படுகிற சூழ்நிலைக்கு இடம் கொடுக்கக்கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக எந்த அரசியல் கட்சிக்கும் தருவதில்லை, பொதுவாக இருப்பவைகளுக்கு அனுமதி பெற்று வழங்கலாம் என்ற அளவு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பல நகரங்களில் இம்மாதிரி அரசியல் கட்சிகள் அல்லது பொது ஸ்தாபனங்களுடைய நிகழ்ச்சிகள் நடத்துவதற்குச் சரியான இடம் இல்லை. நம்மைவிட அதிக கட்சி மாச்சரியங்கள் உள்ள உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கூட அரசாங்கப் பள்ளிகளை இம்மாதிரி காரியங்களுக்கு பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் பயன்படுத்த அனுமதிக்கிறார்கள். அதுபோன்று இங்கும் அனுமதித்தால் அங்கெல்லாம் நடக்காத கோளாறு இங்கு என்ன நடந்துவிடும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அங்கெல்லாம் எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்பட்டன என்ற புள்ளிவிவரத்தை வேண்டுமானால் நான் பின்னர் தருகிறேன். பள்ளிக்கூடங்கள் மற்றவைகளில் எப்படிப்பட்ட மாச்சரியங்கள் ஏற்பட்டன என்பதையெல்லாம் கூறலாம். கூடுமானவரையில், தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் இப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்திவிடுவோமானால் பெரும் கேடு ஏற்படும் என்பதற்காகத்தான், அரசியல் கட்சிக் கூட்டம் நடத்த பள்ளிகளை அனுமதிப்பதில்லை. ஆனால், அரசியல் கட்சி பொதுக் கூட்டம் கூடுவதற்கு, இன்னும் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடம் வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றங்கள் சார்பாக

1974 மார்ச் 21]

பொதுமக்கள் கூடுவதற்கும், அரசியல் கட்சிக் கூட்டங்களைக் கூட்டுவதற்கும், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துவதற்கும் ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கு. காமாட்சி: அரசாங்கப் பள்ளிகளில் கடைப்பிடிக்கப் பட்டுவரும் இந்த விதிமுறை தனியார்ப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த விதி எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அமைச்சர் அவர்கள், இந்த விதி எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தும் என்றார்கள். திருச்சியில் இருக்கின்ற பிஷப் ஹீபர் கல்லூரியில் அரசியல் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா? இனிமேல் அதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்க முயற்சி எடுக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எல்லாக் கல்வி நிலையங்களிலுமே நான் குறிப்பிட்ட விதிமுறை கடைப்பிடிக்கப்படுவது நல்லது. தனிப்பட்ட ஆணை ஏதாவது பெறப்பட்டதா என்பதற்கு விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடம் இல்லை. அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

வால்பாறையில் ஆசிரியர்களுக்கு குளிர்காலப் படி

*534 **வினா—திரு. இ. ராமசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல் மட்டத்தில் இருந்து 1,000 மீட்டர் உயரத்தில் பணி புரியும் அரசு ஊழியர்களுக்கு குளிர்காலப் படி கொடுப்பது போல, வால்பாறை அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வால்பாறை அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு குளிர்காலப் படி கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு குளிர்காலப் படி வழங்குவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.